# தமிழா! தமிழா!!

இரா. இளங்குமரனார்

# தமிழா! தமிழா!!

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்

மதுரை - 625 006.

## நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | தமிழா! தமிழா!! |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பொருள் | வரலாறு |
| பதிப்பு | முதற்பதிப்பு - ஏப்பிரல் 2016 |
| பக்கம் | 28 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 18.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 1000 |
| விலை | உருவா. 15/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு,<br>திருநகர், மதுரை - 625 006. |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங் அவுசு"<br>திருச்சி - 23 |

நூல் கிடைக்குமிடம் :

- **திருவள்ளுவர் நிலையம்**
  7, இராமன் தெரு, திருநகர்,
  மதுரை - 625 006.


★ ★ ★

# இச் சுவடி நோக்கு

தமிழா தமிழா என்னும் இக்குறிப்புச் சிறு சுவடி,
உணர்ச்சியைத் தூண்ட எழுதப்பட்டதன்று!
உண்மையாக உணர்ந்து ஒன்றாக நின்று
பாடுபட எழுதப்பட்டது!

பக்கத்தானைப் பார்த்து – பார்வையை விரித்து – பண்டைப் பேறுகளை மீட்டெடுத்து – நானும் விடுதலைப் பிறவி தான், கொத்தடிமைப் பிறவி இல்லை – என்பதை நிலைநாட்டுவதற்கு எழுதப்பட்டது! வாய்ச் சொல் எழுச்சி வாழ்வு தாராது! வரிந்து கட்டி நின்று பாடுபடுதலே வாழ்வு தரும்!

வாழ்ந்த எத்தனையோ இனங்கள் வீழ்ந்து கிடந்தும்
மீட்டெழுச்சி யுற்று மீப்புகழ் பெறாமல் போகவில்லையே!
அடிமட்டமாகக் குலைந்த மண்ணும் இனமும் மொழியும்
மேல்மட்டத்தின் மேல்மட்டமாய் ஆகாமல் இல்லையே!
இவை உலக வரலாறு இல்லையா?
உன் வரலாறும் அதுவாகக் கூடாதா என்னும்
உந்தலில் எழுந்த சுவடி இது!

இந்நூல் செவ்வையாய் வெளிவர மெய்ப்புப் பார்த்தல் முதல் அனைத்தும் தம் மெய்யாம் செயல் எனக் கொண்ட முனைவர் திருநிறை பி.தமிழகனார்க்கும், திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார்க்கும் மிகுபெரும் நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

**இரா. இளங்குமரன்**

# நூல்

- தமிழா!

  உன் வரலாற்றைப் பார்!

  என்று நீ ஒன்று பட்டு இருந்தாய்?

  தமிழகம் மூவர் நிலமாக இருந்தது; மூவர் நிலமும் மொழியால் தமிழ் நிலமாக இருந்தது. மொழி வழியால் அவர்கள் ஒன்றுபட்டிருந்தார்களா? அவர்களுக்குள் முட்டுதல் இல்லாத - மோதுதல் இல்லாதநாள் உண்டா? அன்றே சான்றோர், மூவேந்தரும் கூடியிருந்த ஓரிடத்தில் மகிழ்ந்து, “இன்றே போல்க நும் புணர்ச்சி” என்றதை ஏற்றார்களா? ஏற்றிருந்தால் அயலார் இங்கு வந்து ஆட்டம் போட்டிருப்பாரா?

★ ★ ★

- தமிழா,

  மூவேந்தரும் தமிழராய் - தமிழினத்தாராய் ஒன்றியிராமையால் நாடும் மொழியும் கெட்ட கேட்டைப் படிப்பினையாகக் கொண்டாயா? கொண்டிருந்தால் இன்றைக்கு உன் மண் இழப்பு - இன அழிவு - மொழிக் கேடு - ஆற்றுநீர்ச் சிக்கல் - ஏற்பட்டிருக்குமா? எல்லாம் இழந்தும் இனி இழக்க எதுவும் இல்லை என ஆகிய இப்பொழுதும் நீ ஒன்றுபட வில்லை என்றால் என்று தான் ஒன்று படுவாய்! ஒன்றுபடா இனம் உருப்படுமா?

★ ★ ★

- தமிழா,

  ஆந்திரத்திலோ, கருநாடகத்திலோ, கேரளத்திலோ மண்ணின் மைந்தன் தவிர எவனாவது ஆள்வது, அமைச்சனாய் தலைமை அமைச்சனாய் ஆவது முடியுமா? உன் மண் என்ன அயலானுக்கே பட்டாப்போட்டுக் கொடுக்கப் பட்டுவிட்டதா? உன் வீட்டை அயலான் ஆளவிடுமளவு மானங்கெட்டவனா நீ! வீட்டின் கூட்டுத்தானே நாடு?

★ ★ ★

- தமிழா,

  மூவாயிர ஆண்டு ஆரியத்தமிழனாய்க் கெட்டாய்; அவனினும் கெடுப்பவன் ஆனாய்! ஆங்கிலத் தமிழனாய் முந்நூறு ஆண்டுகள்

ஆனாய்! அவனிலும் தமிழைக் கெடுத்தாய். இதுகால் திரவிடத் தமிழனானாய். இல்லாத பெயரை இட்டுக் கொண்டு ஏமாற்றலே வாழ்வானாய்! நீ, தமிழனாக – தமிழ்த் தமிழனாக – ஆவது எப்போது? அப்போதே நீ உருப்படுவாய்!

★ ★ ★

- தமிழா,

உன்னைத் தாழ்த்தலில் நீயே தலை!

உன்னவரைக் கெடுத்தலில் நீயே முதல்!

உன்மொழியை இழிமையாக்கலில் நீயே முன்னவன்!

உன் மண்ணை இழத்தலில் நீயே இழவுக்குரியன்!

உன் பண்பாட்டைக் கெடுக்க எவர் வேண்டும்?

நீயே போதும்! இல்லையா?

★ ★ ★

- தமிழா,

உன்னை அழிப்பான் உனக்கு நல்லன்;

உன் மொழியைக் கெடுப்பான் உனக்கு நல்லன்;

உன் பண்பைச் சிதைப்பான் உனக்கு நல்லன்;

உன் அரசை அயலான் ஆளின் உனக்கு நல்லன்;

உன்னை ஒழிப்பான் உனக்கு உறவன்;

நீ எப்பொழுது உன்னை உணர்வாய்?

★ ★ ★

- தமிழா,

உன்மொழி உயர்மொழி, தனிமொழி, செம்மொழி. அதைப்படைத்தவன் அறிவியல் நுண்ணியன். அதனை அறியும் அறிவு உனக்குண்டா? அதனை உணர்ந்து வளர்க்கும் திறம் உனக்கு உண்டா? அதனை அழிக்கின்றவன் கயவன் என்று என்றாவது எண்ணியது உண்டா? அழிப்பான் அழிப்புக்கு நீ இடம் தராமல் இருந்தாயா? அழிக்க நீதானே முந்து நின்றாய்! நீ, நீயாக என்றாவது இருந்தாயா? எவனெவனையெல்லாம் தூக்கிச் சுமந்தாய்!

இருப்பவரை ஏறிட்டுப் பாராமல் செத்தாரைத் தேடித் தூக்கிச் சுமக்கும் நீ, என்று திருந்துவாய்? உன்னை உணராத நீயா - உலகை உணர்வாய்?

★ ★ ★

- தமிழா,

  பக்கத்தவனைப் பார் - விட்டுத்தருகிறானா - அவன் மண்ணை?

  விட்டுத்தருகிறானா - அவன் மொழியை?

  விட்டுத் தருகிறானா - அவன் பண்பாட்டை?

  விட்டுத் தருகிறானா - அவன் ஒன்றுபடலை?

  உனக்கென்ன கேடு?

  கருவிலேயே இக்கேட்டோடு தான் வந்தாயா?

  என்றும் உணரா மரத்துப் போனவனா நீ?

★ ★ ★

- தமிழா,

  உன் தாய்மொழி ஒரு நூற்றாண்டுக்குள் செத்தமொழியாகிவிடும் என்று உலகம் அறிவிக்கிறதே! உணர்ந்தாயா? எந்தமொழி ஆட்சிமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி கல்வி மொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி வழிபாட்டு மொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி இசைமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி சடங்குமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி வீட்டுமொழியாக இல்லையோ, அந்தமொழி; நூற்றாண்டில் அழியும் என்கிறதே உலகப் புள்ளி விளக்கம். அதனை உணராத நீ உண்மையில் உயிரோடும் உணர்வோடும் இருக்கத்தான் செய்கிறாயா?

★ ★ ★

- தமிழா,

  தாயை மதிக்கும் பிறவி நீ என்றால் உன் தாயை ஏதிலி இல்லத்திற்கு அனுப்புவாயா? உன் தாயை ஏதிலி இல்லத்திற்கு அனுப்பிவிட்டு எத்தனை தாய்மார்களை நீ ஊட்டி வளர்த்தாலும், நீ பாவி பாவியே என்னும் உணர்ச்சி உண்டாகாதா? உன் தாய் மொழியைப் மழலையும் பேசத் தெரியாப் போலிக் கல்வியைக் கட்டி யழும் நீ, எப்படி விளங்கப்

போகிறாய்? தாயை மதியாத் தறுதலையை ஊரும் உலகும் காறித் துப்புமா துப்பாதா? எந்த மொழியாளனாவது இப்படிக் கேட்டைச் செய்வதைக் கண்ணில் காண்கிறாயா?

★ ★ ★

◆ தமிழா,

உன் குடும்ப விழாவை – குடும்பச் சடங்கை முன்னர் எவர் நடத்தினார்? அறிவாயா? தாய்மார் நடத்திய குடும்பச்சடங்கை ஊர்த்தலைமை உறவுத்தலைமை பறித்ததே – அந்த அளவில் நின்றதா? அவற்றை அயல் மொழியார் பறித்துக் கொண்டார் என மீட்க முனைந்த தமிழ்ப் பெரியர்களை நீ எண்ணியதுண்டா? அவரின் வழியில் நடந்ததுண்டா? நீயே அழைத்துத் தீயைக் கொளுத்து என்னாமல், எவனாவது தானே வந்து கொளுத்துவானா?

★ ★ ★

◆ தமிழா,

கோயிலுக்குள் போகிறாயே என்னென்ன கொண்டு போகிறாய்? மற்றைச் சமயத்தார் கோயிலுள் போகும் போது அவர் தம் நெறிநூலைக் கொண்டு போகின்றனரே! நீ அப்படிக் கொண்டு போவதுண்டா? உனக்கு நெறி என்பதே இல்லையா? நெறிநூல் என்பதே இல்லையா? உனக்கு என்ன ஆனது? எதனால் ஆனது? எண்ணிப் பார்த்தாயா? இனியாவது எண்ணிப் பார்ப்பாயா?

★ ★ ★

◆ தமிழா,

வானார்ந்த கோபுரங்கள், கோட்டைகள் கட்டினார் எவர்? எவரைக் கொண்டு கட்டினார்? எவர் செல்வத்தைக் கொண்டு கட்டினார். எவர் மண்ணில் எழுப்பினார்? அவற்றை அப்படியே அயலாரிடம் ஒப்படைத்துக் கெட்டழிய இப்படிக் கெட்டுப்போனவர் உலகில் எவரேனும் உண்டா? கெட்டுப் போவதே என்பேறு என முடிவு செய்து விட்டாயா?

★ ★ ★

◆ தமிழா,

கோயிலுள் அருச்சகர் என்ன சொல்கிறார்? அவர் புரிந்து சொல்கிறாரா? புரியாமல் சொல்கிறாரா? நீ புரிந்து கொண்டது ஏதாவது உண்டா? புரிந்து கொண்டது செக்குமாடாய் வந்தது தானே!

செம்மறியாடாய் நின்றது தானே! குளத்துத் தவளை ஒலியும் கோயிலுள் வரும் ஒலியும் உனக்கு ஒன்று தானே! உணர்ந்து நீ எப்பொழுதாவது பார்ப்பாயா?

★ ★ ★

- தமிழா,

எத்தகைய பெருமக்கள் – தம்மையே முழுதுற ஒப்படைத்த பெருமக்கள் – ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார், பன்னீராழ்வார்கள் முதலோர் சொல் ஏறுகிறதா கோயில் கருவறையில்! நீ கருவறைப் படியைத் தாண்டமுடியுமா? உன்னைத் தமிழ்ப்பிறவியாய்த் தந்தது பாவமா? நீ உன்னைப் பெற்ற அவர்களுக்குத் தரும் பாவமா?

★ ★ ★

- தமிழா,

நம்பா மதத்தவனுக்குக் கோயில் வழிபாட்டைப் பற்றிக் கேட்க என்ன உரிமை என்பான். நம்பா மதத்தனுக்கு வாக்குரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை இல்லையா? நம்பா மதத்தவனுக்கு ஒரு தந்தை என் சொத்து. உனக்கு இல்லை என்று சொல்லமுடியுமா? நம்பாத மதத்தவன் மனிதநேயம் கொள்கிறான். பெண்ணுரிமை பேசுகிறான். ஒப்புரிமை பேண வேண்டும் என்கிறான். ‘அத்தகையவனை எம்பிரானுக்கு ஏற்கும்’ என்கிறார் அப்பரடிகள். நல்ல சமயம் நாத்திகம் வெறாது என்கிறார் திரு.வி.க. இவையெல்லாம் கண் மூடிப் பிறப்பவனுக்கு எட்டாதே! ஏனெனில் ‘கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக! சமயவெறி! சாதிச் சழக்கு’! என்ற வள்ளலாரை அறியானே!

★ ★ ★

- தமிழா,

கிறித்தவனைச் சுட்டுவான். கிறித்தவன் அடிமை ஆக்கினான். கிறித்தவத் தொண்டர் கல்வி தந்தார். மருத்துவம் தந்தார். சாதிமை பாராட்டவில்லை! தீண்டார் என்று தள்ளப்பட்டவரையும் சமையல் செய்யவும் கோயில் வழிபாடு செய்யவும், அரசு வேலை பார்க்கவும் வைத்தார். தீமையோடு நன்மையும் செய்தார். தமிழை ஒழிக்கவே பிறப்பு - தமிழனைச் சூத்திரன் ஆக்கவே என் பிறப்பு என்னும் நீ கோயிலோடு பள்ளி மருத்துவமனை வைத்ததுண்டா? வேள்விச்

சாலை வைக்கவும் வேதமோதவும் தானே வேந்தனை அடிமைப்படுத்தினை என்று கேட்பது தவறா? கிறித்தவப் போதகர் செய்த தமிழ்த் தொண்டு தானே தமிழனை விழிக்கச் செய்தது.

★ ★ ★

◆ தமிழா,

இசுலாமியன் குரான் உருது மொழியில் ஓதுகிறானே என்றால் அவன் கோயில்! அவன் பணம்! அவன் மொழி! அவன் வழிபாடு! அப்படி உனக்கெனக் கோயில் கட்டி வேதமே ஓது. எவர் மறுப்பார்! இது தமிழன் சொத்து! தமிழகச் சொத்து! அவன் மொழியில் உருக்கும் தெய்வப் பாடல்கள் இருக்கப்புரியா மந்திரம் எதற்காக என்பது தானே வினா! 'அருச்சனை பாட்டே ஆகும்' என்றாரே தம்பிரான் தோழர் சுந்தரர்.

★ ★ ★

◆ தமிழா,

கழுவாய் உன்பழி போக்குமா? தண்ணீரால் கழுவுதல் கழுவாய் என்றால் தவளை போல், மீன் போல், தண்ணீரிலேயே கிடக்கலாமே! புற அழுக்கைப் போக்கும் நீர். அக அழுக்கைப் போக்குமா? உன் நெஞ்சைக் கழுவ, வஞ்சகர் என்றும் துணை செய்வாரா?

★ ★ ★

◆ தமிழா,

உன் நெஞ்சம் அறிய. நீயே எண்ணினால் அன்றி உன் உயிரனையராலும் திருத்த இயலாதே. "என்ன தவறு செய்துவிட்டேன் யான். சீ.சீ. என்ன பிறப்பு நான். என்ன அறிவு பெற்றும் என்ன பயன்? இனிச் செய்யேன்; செய்யவே மாட்டேன்" என்பது தானே கழுவாய். அக்கழுவாயை எப்பொழுது செய்யப் போகிறாய்? அப்பொழுதே நீ கழுவாய் பெற்றவன் ஆவாய். "எற்றென் றிரங்குவ செய்யற்க" என்பது வள்ளுவம்.

★ ★ ★

◆ தமிழா,

உன் பெற்றோர் - அவர் செய்த நலப்பாடுகளை எண்ணி உருக வேண்டியது யார்? நீயா? அயலாரா? கூலிக்கு வைத்த ஆளா? கூட்டிக் கொண்டு போன ஆளா? உன் பெற்றோரை நினைத்து உருக வேண்டிய நீ என்ன செய்கிறாய்? ஆள் வைத்து அவர் சொல்லியபடி

கும்மியடிக்கிறாய், கூத்தாடுகிறாய்! இப்படியா போக வேண்டும் உன் அறிவு! உன் பெற்றோர் பெயரால் நினைவால் என்ன செய்தாய் நீ? "திதியாம் திதி" உன்பாழும் மதி இதனை உணருமா?

★ ★ ★

- தமிழா,

உலகின் மூத்தகுடி நீ. உலகின் மூத்தமொழி உன்னுடையது. பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னே குமரியொடு வடவிமயம் வரை வாழ்ந்தவன். ஆணை செலுத்தியவன் அவன்! நீ சுற்றாத கடலில்லை! வெல்லாத நாடில்லை. ஆனால், உனக்காக ஒரு நாடு உலகில் உள்ளதா? உன் உயர்மொழி உலக மன்றம் ஏறுகிறதா? உன் பிறந்த மண்ணிலேயே சாகடிக்கத் துணிந்த நீ எங்கே அதனை ஆள வைப்பாய் – எப்படி வாழ வைப்பாய்?

★ ★ ★

- தமிழா,

ஒரு நாடு பன்மொழி, பல இன நாடு என்றால் என்ன செய்ய வேண்டும். பல இனங்களுக்கும், பல மொழிகளுக்கும் ஒப்புரிமை ஆளுமை வேண்டும் அல்லவா! வல்லாண்மையால் இந்தி மட்டும் ஆட்சி மொழி என்று ஆனால் அது, ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் தடவுவது இல்லையா? உன் மாநில ஆட்சி, உன் மாநில முறை மன்றம், உன் மாநில மொழிக் கல்வி உனக்கு இல்லை என்றால், இது விடுதலை நாடா? கெடுதலை நாடா?

★ ★ ★

- தமிழா,

உன் அறநூலாம் திருக்குறளுக்கு ஒப்பாம் ஒரு நூல். உலகில் இல்லை என்று உலகம் சொல்கிறது. உன் நாட்டில் தேசியக் கொடி உண்டு – தேசியச் சின்னம் உண்டு – தேசியப் பறவை உண்டு – தேசியப் பூவுண்டு – தேசிய விலங்குண்டு, ஆனால் தேசிய நூல் உண்டா? தேசிய நூல் எனத் திருக்குறள் ஆயதா? ஆக்க நினைத்தால் உன் சட்டமன்றில் நிறைவேற்றினால் ஆகிவிடுமா? உன் நூலின் உயர்வு பற்றி உரைத்த நூலையே உள்நாட்டின் உள்ளே வரவிடாமல் தடுத்த பெருமைக்குரியர் உள்ள நாட்டில் நீ நினைத்தும் பார்க்க முடியுமா?

★ ★ ★

◆ தமிழா,

நீ இழந்த இழப்புகளுக்கு எண்ணிக்கை உண்டா? எல்லை உண்டா? உலகம் பேசினாய் - தேசியம் பேசினாய் - உன் மண்ணைச் சுரண்டலைக் கண்டு கொள்ளவே இல்லை. சுரண்டியவரும் தேசியத்துள் தானே இருந்தார். இன்று அதன் விளைவு என்ன? ஆற்றுச் சிக்கல் – அணைச் சிக்கல் – காட்டுச் சிக்கல் – மொழிச் சிக்கல் – என எத்தனை சிக்கல்?

★ ★ ★

◆ தமிழா,

உன்னைப் போல் கொள்ளையனுக்குக் கூட்டுறவாளன் எவனாவது உண்டா? அண்டை மாநிலங்களில் ஆற்று மணல் அள்ளத் தடை. ஆனால் உன் ஆற்றில், மணல் அள்ளிக் குவித்து ஆயிரம் பரம்பரைக்குக் கொள்ளையடித்துக் குவிக்கின்றார். உழவன் உலகுக்காகப் பாடுபட விடாமல் மணற் கொள்ளையடிக்கிறாய். நிலத்தடி நீரைக் கெடுக்கிறாய். விளை நெல்லினும் அள்ளும் மணலால் பணம் அள்ள வழிகண்ட நீ உனக்கு ஆற்று நீர்ச் சிக்கல் பற்றி என்ன கவலை?

★ ★ ★

◆ தமிழா,

உலகத்தின் மாசான தொழில் எதுவும் செய்யக்கூடாதென மாசுக் கட்டுப்பாடு உண்டு. உலகமாசு என்பவைஎல்லாம் தொடங்க உலக நாடுகளுக்கெல்லாம் சீர்வரிசை வழங்கித் தொழில் தொடங்க ஒப்பந்தம் போடுகிறார் ஆள்பவர். சுருட்டுவது கையூட்டு மட்டும் அன்று! சுருட்டுவது நாட்டையே; சாகடிப்பது மக்களையே என்பதை எண்ணவாவது செய்கிறாயா?

★ ★ ★

◆ தமிழா,

ஆள்பவன் ஒப்புகை இல்லாமல் அயலான் அணுவுலை உன் நாட்டில் ஏற்படுமா? அண்டை மாநிலத்தான் ஏற்காத அணுவுலையை. அன்றே மண்ணின் மைந்தர் எதிர்த்தும் இந்நாள் வரை எதிர்த்துக் கொண்டிருந்தும் மேலும் மேலும் விரிவாக்கத்திற்கு முனைவது என்ன? அயல் மாநிலத்தான் துணிவு அணுவும் இல்லாக் கோழைத் தன்னல அயலவரே இங்கு ஆள்வது தானே!

★ ★ ★

- தமிழா,

  'வடவேங்கடம் தென்குமரி' எவர் மண்? வேங்கடத்துக்கு அப்பால் தானே மொழி பெயர் தேயம்? வேங்கடம் புல்லி என்பான் ஆட்சிபுரிந்த மண் என்பது புறப்பாடல் பட்டய மாயிற்றே! சங்கப் பாடல்களில் 26 பாடல்கள் மொழி பெயர் தேயம் வேங்கடத்துக்கு அப்பால் என்கின்றனவே? இவை கொள்ளையாய்ப் போக எல்லைக் கோடு செய்த கேடு தானே! நீயும் கூடியிருந்துதானே செய்தாய்!

★ ★ ★

- தமிழா,

  நன்னூல் பவணந்திக்கு வள்ளலாக இருந்த சீயகங்கன் ஆட்சி செய்தது குவளால புரம் என்னும் கோலார்! அதனைக் கருநாடகம் வளைத்துப் போட்டதோடு இழுத்தும் மூடியதே ஏன்? தமிழனை ஒழிப்பதற்காகத் தானே!

★ ★ ★

- தமிழா,

  உன் கோயில் கண்ணகி கோயில்! உன் எல்லைப் பகுதியில் இருந்த கோயில்! அதனைக் கேரளத்தான் வளைத்துப் போட்ட போது ஆட்சி செய்தவன் தடுத்தானா? எல்லைக் கோட்டுக்கு எதிர்த்தானா? அந்நாள் இந்தியப் பார்வை பார்த்த கேடுதானே. இந்நாள் பாலாறு, காவிரியாறு, முல்லையாறு, மூணாறு, இடுக்கி முதலாம் சிக்கல்! தேசியமாம் தேசியம்! ஒருமைப் பாடாம் எருமைப்பாடு!

★ ★ ★

- தமிழா,

  தமிழக மீனவர் வெருட்டப்படாத - மீன் சுருட்டப் படாத - சிறைப் படுத்தப்படாத - சுட்டுக்கொல்லப் படாத நாள் உண்டா? நம் கடற்படை என்ன செய்கிறது? அதற்கு அடிமூலம் என்ன? நம் மண்ணாம் கச்சத் தீவைச் சிங்களத்தானுக்குத் தந்தது தானே! ஆயிரக் கணக்கில் தமிழன் காவு வாங்கப்பட்டாலும் இந்தியம் காது செவிடாகக் கிடப்பது என்ன? தமிழன் என்றால் அவ்வளவு இளக்காரம்!

★ ★ ★

◆ தமிழா,

பயிர் நிலங்களை எல்லாம் பாழாக்கும் வேலிக் கருவேல் கேரளத்தில் ஏன் இல்லை! இங்கே எங்கும் அதுவாகக் காட்சி தருவது ஏன்?

அவனுக்குள்ள மூளை உனக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தும் சான்றுதானே இது!

★ ★ ★

◆ தமிழா,

சென்னை மாநகரம் – தமிழர் நகரமா? தமிழர் தலைநகரமா? அந்த நிலை அடியோடு அழிய எவர் மூலம்? அயல் நாட்டவர், வடநாட்டவர், அண்டை நாட்டவர், எல்லார்க்கும் மேய்ச்சல் நிலமாயதால் இப்பொழுது மதுரை, சேலம், கோவை, ஈரோடு, விழுப்புரம், திருச்சி, தஞ்சை என எல்லாப் பெருநகரங்களும் அயல் குடியேற்றம், தமிழன் தலைதடவல், தமிழரழிப்பு; மூளைப்பிறவியா நீ; முனைப்புப் பிறவியா நீ?

★ ★ ★

◆ தமிழா,

எல்லா நாட்டிலும் ஆலை – நூற்பாலை – சாய ஆலை உண்டுதானே! ஆனால் நிலத்தையே – ஊரையே நாற வைத்து – மண்ணையே சாய்க்கடையாக்கி விடும் மாசு ஏற்படுவதற்கு அயலார் மூலமா? அரசு மூலமா? ஆய்வாளர் மூலமா? இவையெல்லாம் பணமுதலைக்குச் சார்பாக இருப்பதால் தானே. உலகமே உன் நாட்டை நாற வைக்கிறது.

★ ★ ★

◆ தமிழா,

உழவன் மண்ணின் மைந்தனாய் வாழ்ந்தான். இயற்கைஉரம், தழையுரம் இட்டான். விளைவும் கொழித்தது; மண் நிலமும் சிறந்தது. ஏற ஏறப் பறக்கும் விலையுள்ள வேதிம உரம், மருந்து ஆயவற்றை அறிவாளிகள் படைத்துப் படைத்து, மண்ணில் மண்புழுவே இல்லாமல் மலடாக்கி விட்டார்கள். அழிவுக்கு அவற்றையெல்லாம் தந்தவர்க்கு அரசுப் பதவி, விருது உண்டு. உருப்படுமா வேளாண்மை?

★ ★ ★

◆ தமிழா,

வேளாண்மை உழவுத் தொழில். உழவன் உலகக் காவலன். அவன் இலவயத்திற்கு அலைகிறான். இலவயத்தால் அவன் வாழ முடியாது.

உழைப்புத் தொலைந்தது, உள்ள பண்பாடும் கெட்டது. உழைப்பும் படிப்பும் ஒருங்கே கெடுக்க இலவய வண்ணத் தொலைக்காட்சி, வீடுதோறும் உலகக் கழிவு கொட்டும் கழிநிலமாயிற்று. காக்கும் அரசு செய்யும் செயலா இது?

★ ★ ★

- தமிழா,

  இந்தி எதிர்ப்பு எதற்காக, தமிழைக் காக்கவா? ஆங்கிலத்தைக் காக்கவா? உன் மாநிலத்தின் இருமொழிக் கொள்கை, மும்மொழிக் கொள்கை இந்தியத்தினும் மோசடிக் கொள்கை அல்லவா! இது திராவிடக் கொள்கையா? தீரா விடக் கொள்கையா?

★ ★ ★

- தமிழா,

  தமிழைக் காப்பதற்காகத் தம்மை எரியூட்டிக் கொண்டவர் எத்தனை எத்தனை பேர்! அவர்கள் புதைகுழியாம் அரியணை மேல் வீற்றிருந்து ஆட்சி செய்த திராவிடங்கள் தமிழைக் காத்தனவா?

  'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது முழுக்க முழுக்க ஏமாற்றுத் தானே! இருந்த அரசுப் பள்ளித் தமிழையும் இல்லாமல் கெடுத்து விட்டதை எண்ண மாட்டாயா?

★ ★ ★

- தமிழா,

  அண்டை அயல் மாநிலங்களில் பல்கலைக்கழகப் பெயர், முறைமன்றப் பெயர்கள் முதலாயவை எவை? சென்னைப் பல்கலைக் கழகம், தமிழகப் பல்கலைக் கழகம் ஆகக் கூடாமை ஏன்? சென்னை நீதிமன்றம், தமிழ்நாட்டு நீதிமன்றம் ஆகாமை ஏன்? உன் இயலாமையும்,அயலான் ஆட்சியில் இருப்பதும் தானே!

★ ★ ★

- தமிழா,

  முறைமன்றத்தில் உன்மொழியில் வாதிடப் படுகிறதா? உன் சிக்கலைப் பற்றி வாதாடுவது உனக்குப் புரிகிறதா? உன் நோயை மருத்துவனுக்கு மொழி பெயர்த்துச் சொல்லி மருந்து தருவதற்கும், உன் மனைவியிடம்

பேசுவதற்கு மொழி பெயர்ப்பாளி வைப்பதற்கும், இதற்கும் என்ன வேறுபாடு?

★ ★ ★

- தமிழா,

பதின்மப் பள்ளிகளாம், கல்லூரிகளாம் பல்கலைக்கழகங்களாம் நோக்கும் இடமெல்லாம் கல்விக் கூடம் என்னும் கொள்ளைக் கூடங்கள். அக் கொள்ளையர் அக்கொள்ளைக்கு முன் கொண்ட செல்வம் என்ன? கல்விக் காதல் எப்படி உண்டாயது? கொள்ளைக் கூடத்தே கொள்ளை கொண்டு, கொள்ளைப் பணம் குவித்துக் கொள்ள ஒப்புகை வழங்கியவர் ஆள்பவரா? அல்லது அவரவரா?

★ ★ ★

- தமிழா,

தமிழ் பயிற்றுமொழிக்குத் தடை; எவர் செய்தது? ஆங்கிலக் கொள்ளையர். தடையாக்க வழிசெய்தவர் ஆள்பவர், தமிழில் பயிலச் சட்டமியற்றாமல் ஆணையிட்டார். சட்டம் செல்லும். ஆணை தள்ளப்படும். உரிமம் கொடுக்கும் போதே தமிழில் பயிற்றினால் தான் உரிமம் என்றால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?

★ ★ ★

- தமிழா,

உன் தாய்மொழியிலுள்ள இசைப்பாக்கள் எவை எவை எனத் தெரியுமா? பெருந்தேவபாணி, தேவபாணி, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பாவைப்பா, பள்ளி எழுச்சி, வரிப்பா வகை, வண்ண வகை, சிந்துப்பா - இவ்வளவு மட்டுமா?

உலக இசையெல்லாம் ஒருங்கு சேர்த்தாலும் ஒரு பகுதி தானும் ஒட்டாத நால்வகைப்பா: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா மட்டுமா? தாலாட்டு, கும்மி, ஒயில், ஒப்பாரி என எத்தனை எத்தனை வகை. இதில் இசை இல்லை என்று இதனை மறைக்க, ஒழிக்க எவரோ இட்டுக்கட்டிச் சொன்னால் நீ ஒப்புவது, உன்னினத்தையே பெற்ற இசைத் தாயை மலடி என்று பழிப்பது போலல்லவா?

★ ★ ★

- தமிழா,

இதோ பார் தியாகராசர் பாடினார். தெலுங்கிசை; தெலுங்கு அவர் தாய்மொழி. வடமொழியில் பாடியவர் சியாமா சாத்திரி - அவர் தாய்

மொழி அது. நீ உன் தாய்மொழியில் பாடுவாயா? உனக்குத் தாயே இல்லை, தாய் மொழியே இல்லை, தாய்மொழியில் இசையே இல்லை; எல்லாமும் இல்லை என எவர் செய்தாலும் நீ என்ன செய்ய வேண்டும்? என்னிசையைக் கேள் என்றல்லவா சொல்லிக் கிளர்ந்திருக்க வேண்டும்!

★ ★ ★

◆ தமிழா,

இசை என்ற சொல் புதுவதா? முத்தமிழே இயல் இசை கூத்து அல்லவா! முத்தமிழ் என்ற பாடப் பிரிவிலேயே இல்லை என்னும் முழுமறைப்பாளனை மூடமாக ஒப்புகிறாயா? அவனை அழைத்துப் பாட மொழிகிறாயே! மேடையிலேயே தமிழிசை, தமிழ்க்கூத்து இல்லாமல் ஆக்கினாயே; இது கோடி கோடி எனச் செல்வம் உடையானைத் தெருக் கோடிப் பிச்சைக்காரன் என்பது போலில்லையா?

★ ★ ★

◆ தமிழா,

கூத்து எவரோ பரதர் வகுத்தாராம்? பரதர் வகுத்தது எப்போது? தமிழ் தோன்றியது எப்போது? அவன் அப்பனுக்கு அப்பன் ஆயிர அப்பனுக்கு முந்தியது அல்லவா பரதம்!

**ஆடுநர்க்கழியும் உலகம் (புறம்)**

**கூத்தாட் டவைக்குழாம் (திருக்)**

இவற்றுக்கு முன்னதா - பரதன் கூத்து? வேல் திரித்தாடும் வெற்றிக்கூத்து - தொல்காப்பியர் சொல்வது அல்லவா? முழுமுதல் இறையே தாண்டவன் என்றும் நடவரசன் என்றும் கூத்தரசன் என்றும் சொல்லி வணங்கும் நீ கோமாளியாக இருந்தால் அல்லாமல் கூத்துக்கலை அயல் வழியது என்பாயா!

★ ★ ★

◆ தமிழா,

கோயில்களில் கூத்தராக எத்தனை எத்தனை பேர்கள் "திருத்தளிப் பெண்டு" என்று இருந்தனர். அவர்கள் கோயில் வளாகத்திலே குடியிருந்து கோயில் பணி செய்தவர் என்பதை அறிவாயா? ஆடல் கலையில் நூற்றெட்டுக் கரணங்கள். எத்தனை கோயில்களில்

கற்சிலையாகக் கோயில் சுற்றில் வெட்டப் பட்டிருக்கவும் அதனைக் காணவும் மாட்டாமல் கண்கெட்டுப் பரதக்கூத்து என்கிறாயே. வடநாட்டுக் கோயில்களில் நூற்றெட்டுக் கரணங்கள காட்டும் சிற்பம் எங்காவது உண்டா?

★ ★ ★

- தமிழா,

அசந்தா சிற்பம், எல்லோரா யானைக்குகை, சூரியனார் கோயில் சிற்பங்களெல்லாம் மாமல்லபுரச் சிற்பங்கள் – தமிழகத்தில் தோன்றிய பின்னரல்லவா தோன்றியவை. மாமல்லர் மகேந்திரனார், நரசிம்மனார் கட்டியது என்கிறாரே அங்குள்ள வழிகாட்டி. அதைக் கேட்டாவது செவி திறக்கவில்லையா உனக்கு?

★ ★ ★

- தமிழா,

நீ என்று தமிழனாக இருந்தாய் – தொல்காப்பியர் காலத்தில் சங்க இலக்கியத்தில், வள்ளுவன் காலத்திலேயே ஆரியன் புகுந்துவிட்டானே, அவன் தீய சூழ்ச்சியில் – புனைவில் – முடிமன்னர் குடுமிகள் பற்றிக் கொள்ளப்பட்ட நாள் முதல் அடிமைப்பட்டாயே! அயன்மையான மொழியை – சடங்கை – தீ வேள்வியைக் கடிந்து கூறினாயா? உன் காதில் விழவே விழாதா? நீ முற்றிலும் செவி இழந்துள்ளாயா?

★ ★ ★

- தமிழா,

ஆங்கிலன் வந்தான். வணிகத்தை நோக்கி வந்தவன் தான். நாட்டையே கொண்டான். இந்தியா மட்டுமா, பல்லபல நாடுகளையும் கொண்டான் தானே. அங்கெல்லாம் அவன் போனபின் அவன் மொழியையும் மூட்டைக்கட்ட, நீ மட்டும் தானே அவ்வெள்ளையனினும் கொள்ளையனாக நாட்டைக் கெடுக்கிறாய். தாய்மொழியை முற்றிலும் இழக்கும் நாடு உன் நாடு போல உலக நாடுகளில் ஒன்று உண்டா?

★ ★ ★

- தமிழா,

எழுத்தில்லா மொழிக்கு எழுத்தை ஆக்குகிறார். ஒரு குழுவார் மொழியை ஒழியாமல் வளர்க்கிறார். பேச்சுவழக்கில் இல்லாததை நாடாள் மொழியாக்க முயல்கிறார். எல்லாம் நிரம்பியுள்ள

தமிழ்மொழியை ஒழித்துவிட முடிவு செய்துவிட்ட உனக்கு முடிவில்லை என்று நினைக்கிறாயா? மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாய் ஆண்டதும் உயிரோடு இன்றும் இருப்பதும் உலகில் உன்மொழி ஒன்று மட்டும் தானே! அதை ஒழிக்கவா உன் நெட்டுறக்கம்?

★ ★ ★

- தமிழா,

அறிந்தது கொண்டு அதன்மேல் அறிய வேண்டியதைப் பெருக்குதல் கல்விமுறை. பள்ளிக்கு வருமுன்னரே பல்லாயிரம் சொற்களைக் கற்றுக் கொண்டு பள்ளிக்குள் கால் வைத்த பொழுதே அவற்றை எல்லாம் முற்றாக ஒழிக்கும் ஆங்கிலக் கொள்ளைப் பள்ளிகள், தேசியப் பள்ளிகள் பெருக்கெடுத்த வெள்ளமாய்த் தமிழைத் துடைத்தழிப்பது துளியளவு கூட உனக்குப் புலப்படவில்லையா?

★ ★ ★

- தமிழா,

உள்ளதை ஒழிக்கவா பள்ளிகள்? அறிவியல் வளர்ந்து வருதல் அவரவர் தாய்மொழி வழி ஏற்பட்டிருந்தால் எத்தனை உலகமேதைகள் கண்டுபிடிப்பாளிகள், படைப்பாளிகள் இயற்கையாகத் தோன்றியிருப்பர்? ஆங்கில வழியிலே மம்மி தொடங்கிக் கும்மியடித்தவர் எத்தனை நோபல் பரிசு குவித்தார்?

★ ★ ★

- தமிழா,

மதிகெட்டதனத்தால் நீருக்கு இரையான உன்நூல்கள் எத்தனை? நெருப்புக்கு இரையான உன் நூல்கள் எத்தனை? செல் என்னும் கறையானுக்கு இரையான உன் நூல்கள் எத்தனை? காணப்பட்ட நூலும் காணாமல் தொலைந்த நூல்களும் எத்தனை? நீயா மொழியைக் காக்கப் பிறந்த பிறவி? உணர்வென்பது உனக்கு உண்டாகவே உண்டாகாதா?

★ ★ ★

- தமிழா,

உன் மருத்துவத்தைப் பார், சித்தர்களின் செல்வமல்லவா அது? சித்தர் மருந்துக்கு எத்துணைப் பெயர். மறைந்து போகச் செய்தவர் சித்த மருத்துவரும் தாமே! தாம் கண்டதைப் பிறரறியக் காட்டியதில்லையே!

ஏன்? பலரறியின் பலியாது என்பது எவ்வளவு கண்மூடித்தனம்? அதன் விளைவென்ன? சித்த மருத்துவம் தன் மதிப்பை இழந்து விட்டமை காணவில்லையா?

★ ★ ★

◆ தமிழா,

சத்திரம் என்பது என்ன?

சாவடி என்பது என்ன?

சத்திரம் மருத்துவம் அல்லவா!

சத்திரம் வைத்தல் அறுவை மருத்துவம் செய்வதல்லவா!

சாவடி முறை மன்றம் அல்லவா; பின்னர் என்ன ஆயின?

உண்டு உறங்க அல்லவா –

உழைப்பை ஒழிக்க அல்லவா

அவை பயன் பட்டன.

★ ★ ★

◆ தமிழா,

தகுதி இல்லாதவன் தக்கவன் ஆகமுடியாதா? முடியாது என அவன் தானே முடிவுகட்டிக் கொண்டால் ஒழிய, முடியாமல் போகாது. நான் தக்கவர்க்கும் தக்கவன் எனத் தன்னம்பிக்கை கொண்டால் தக்கவன் ஆகியே ஆவாய்! தக்கவன் அல்லன் என்று முணுமுணுத்தவரும் மூக்கிலே விரல்வைத்து நோக்கத் தக்கவன் ஆகியே தீர்வாய்!

★ ★ ★

◆ தமிழா,

பட்டத்தால் தான் படைப்பாளியாக முடியுமா? படைப்பாளி என நாம் கொண்டாடுவாரனைவரும் பட்டந்தாங்கியவரா? பள்ளிக் கூடத்தில் அவர் படித்த அளவு என்ன? உலகியலில் படித்ததென்ன? அவர் முயன்ற முயற்சி என்ன? இவையெல்லாம் அல்லவோ அவரைப் படைப்பாளி ஆக்கியது.

★ ★ ★

◆ தமிழா,

படித்தவரெல்லாம் படைத்துவிட்டாரா? பாடியவரெல்லாம் இறவாப் பாவலராகிவிட்டாரா? கற்றவர்கள் எல்லாம் கருவிகளைக் கண்டாரா?

பொறியியல் கல்வி, பொறிகளை இயக்கக் கற்றுத் தருவது தான். புதிது, படைக்க அவர் தனித்து உழைத்த உழைப்பு அல்லவோ அடிப்படை.

★ ★ ★

- தமிழா,

  பொறியை இயக்குபவர் வேறு. பொறியைப் படைத்தவர் வேறு.பொறியைப் படைத்தவர் பொறியை இயக்கவும் வல்லார். ஆனால் பொறியை இயக்குபவர் எல்லாரும் பொறியைப் படைத்தவர் ஆவாரா?

★ ★ ★

- தமிழா,

  உலகத்தியற்கையை முன்னறியவல்ல மூளையர் உளர். அந்த மூளையர் உலகத்தியற்கையின் பிடியுள் சிக்காமல் தப்பிக்க வழிகூற முடியுமே ஒழிய, உலக இயற்கையை மாற்றியமைக்க வல்லரா? வல்லரேல் நிலநடுக்கம் - எரிமலை கக்கல் - சுருட்டி எழாதிருத்தல் - கடுங்காற்று பேய் வெள்ளம், கொடும் பனி, கடும்வெயில் தவிர்க்க - தடுக்க முடிந்ததா? முடியுமா?

★ ★ ★

- தமிழா,

  தாய்த் தமிழின் கட்டமைப்பை, செம்மையை, சொல்லின் பொருளை, அமைப்பு மாண்பைத் துளியாவது அறிந்தவன் அம்மொழியில்-எழுத்தில்-சீர்திருத்தம் வேண்டும் என்று சீரழிக்க எண்ணான்? ஏனெனில் தமிழறிந்தவன் அவ்வாறு சொல்லான். அல்லது தமிழ் வாழ வேண்டும் என்பவன் சொல்லான்.

★ ★ ★

- தமிழா,

  வள்ளுவருக்கும் சினம் வருமா? வர வேண்டிய போது வரும்! சிறுமைப் பிறவி திருந்தா விட்டால், அச்சிறுமைப் பிறவி திருந்தவில்லை எனின் கொடிறுடைக்கும் கூன்கையும் வேண்டும் என்று கயமையில் உரைத்த தமிழினக் காவற் பெருமையர் அவர்.

★ ★ ★

- தமிழா,

  என் முகத்தில் காறித் துப்பு- நான் குறையுடையவன், பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் என் தாய்த் தமிழை இழிமைப்படுத்தி கொச்சையாக்கி - குறைகண்டு-எள்ளும் கழிசடையைக் கன்னத்தில் அறைவது என் கடனே எனக் கருதுவான் எவனோ அவனோ தமிழப்பிறவி.

★ ★ ★

- தமிழா,

  தமிழ்ப் பற்றுடைய வஞ்ச நெஞ்சம் இல்லாத- உட்பகையாகக் கெடாத - ஒரு தமிழினத் தலைவன் உருவாகும் நாள் எந்நாள்? அந்நாளே தமிழ் வாழும் நாள்! அதற்குரிய ஆள் யார்? அலமரல் அன்றி ஆக்கம் தெரியவில்லை: அவ்வளவு கூட்டுக் கேடுகள் தமிழ் நாட்டுக்கு உண்டாகிவிட்டனவே!

★ ★ ★

- தமிழா,

  தமிழ்நாடு என்று பெயர் வைக்கவே ஒருவர் உயிர்க் கொடை கொடுக்கச் செய்த மண், தமிழைக் கருவில் இருக்கும் பிள்ளைக்கும் அறிய வாயாமல் அழிக்க வேண்டும் என்றும் ஆங்கில வழிக் கொள்ளையர், அக்கொள்ளையரை ஊட்டி வளர்க்கும் ஆட்சியர் உள்ள வரை தமிழ் நாளும் நாளும் சாகடிக்கப்படுவது இல்லாமல் வாழப் போவதில்லை.

★ ★ ★

- தமிழா,

  தமிழுக்கு ஐயும் ஔவும் தேவை இல்லையாம். ஒருவர் இதைச் சொல்லவே பிறந்த பிறப்பாகத் திரிகிறார். ஐயும் ஔவும் நெடில் ஓரெழுத்து ஒருமொழி. அதனை அய் என்றும் அவ் என்றும் சொன்னால் நெடிலாமா? பொருளுடையதாகுமா? ஐயின் அருமையும் பெருமையும் அறியா ஆட்டம்! அதற்கும் ஒரு கூட்டம்! சொல்லுவதென்ன, நான் தமிழை வளர்க்கிறேன்.

★ ★ ★

- தமிழா,

  உன்னகமாம் தென்னகத்தில் வடநாட்டவர் பெயரால் எத்தனை சாலை, எத்தனை தெரு, எத்தனை எத்தனை சிலை!

உன்னாட்டவன் அவ்வளவு கழிசடையா? எவன் சிலை வடக்கே உண்டு? எவன் பெயரால் தெருவும் சாலையும் ஊரும் நகரும் மன்றமும் மாளிகையும் உண்டு? ஒருமைப் பாடாம் ஒப்புரவாம்!

★ ★ ★

- தமிழா,

கல வணிகத்தால் உலக வலம் வந்தவன் பரம்பரையன் நீ! உன் வணிகமெல்லாம் இப்பொழுது எவர் கையில்?கப்பற்கலை மூலவன் நீ! கடற்படை வைத்த வழியன் நீ! கப்பலோட்டிய தமிழர் மீட்டெடுத்த வரலாற்றை மறைத்ததே வடநாட்டு வரலாறு! கல்கத்தா கழகம் தான் ஆங்கிலேயரை எதிர்த்து முதல் முதல் கப்பலோட்டியதாம்! வரலாற்று ஏய்ப்பில்லையா இது?

★ ★ ★

- தமிழா,

உன்மண்ணில் வள்ளல் எவனும் பிறந்ததில்லையா? பாரி ஓரி, காரி, நள்ளி, அதியமான், பேகன், ஆய், குமணன் என்பார் எவரும் வள்ளல் இல்லையா? எவனாவது தாய் வயிற்றில் இருந்து கவச குண்டலங்களோடு பிறந்த பிறப்பைக் கண்டிருக்கிறாயா? அந்தக் கர்ணன் தான் கொடை வள்ளலா? உன் மண்ணில் வள்ளன்மை இல்லை என்றால், இந்தக் கதை விடுவார் இங்கே கொழுமையாக வாழ்ந்து கொண்டிருக்க முடியுமா?

★ ★ ★

- தமிழா,

வில்லுக்கு விசயனாமே? உன் கொல்லிமலை ஓரி உன் கண்ணில் படவில்லையா? கருத்தில் எழவில்லையா? யானையை, புலியை, மானை, பன்றியைத் தைத்துருவி உடும்பைத் தாக்கிப் புற்றில் ஒன்ற அம்பு ஏவிய வல்வில் ஓரி வரலாறு உனக்கு வேப்பங்காயா? எத்தனை எத்தனை நாடுகளை வென்ற பரம்பரையன் நீ சிந்தனை அற்றாய்! செயலும் அற்றாய்!

★ ★ ★

- தமிழா,

காசி விசுவநாதர்க்குப் பூச்சூட்டலாம். புனலாட்டலாம் போன போன எவரும்? தென்காசி சிவகாசி என்றில்லை எந்தப்பெருநகர்க்

கோயிலிலாவது கருவறைக்குள் அருச்சக நூலர் தவிரப் பிறர் புக முடியுமா? கோயில்களை எல்லாம் பேர் கொண்ட பார்ப்பான் தனக்கே பட்டாப் போட்டுப் பிறக்கு முன்னரே அரசு தந்து விட்டதா? 'பேர் கொண்ட பார்ப்பான் பூசை செய்தால் அரசுக்கு அழிவாமே நாட்டுக்குப் பஞ்சமும் நோயுமாமே' என்கிறதே திருமந்திரம்.

★ ★ ★

- தமிழா,

வந்தேறியாகத் தஞ்சையைப் பிடித்த சிவாசி பரம்பரையையே சாராத ஒருவர், மராட்டியர் என்னும் ஒரே தகுதி கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட கோயில்களின் அறங்காவலராக உலாவ முடிகிறதென்றால் காரணம் என்ன? கேடு கெட்ட தமிழருள் சிலர் கொத்தடிமையாதலே கொண்ட பேறு என்றிருப்பது தானே! மானம் இருப்பவர் தமிழரும் இல்லை, மானம் உள்ளவர் அவ்வறங்காவலரும் இல்லை என்பதன் சான்று தானே இது.

★ ★ ★

- தமிழா,

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிய இராசராசன் திருப்பதிகம் பாட நாற்பத்தெட்டு ஓதுவார்களை ஏற்படுத்தினான். ஒரோ ஓர் அருச்சகனையும் ஏற்பாடு செய்தான். 48 ஓதுவார்க்கு ஒருவர் தானும் இல்லை. ஓரர்ச்சகருக்கு ஒரு நூற்றுவர்க்குமேல் அர்ச்சகர் உள்ளனர். அறங்காவல் துறை உள்ளது! அரசு அமைத்த அறங்காவலர் உள்ளார்; ஆணையர் உள்ளார்; தஞ்சாவூர் மக்களும் உள்ளனர்! இராசராசன் கல்வெட்டும் மறையாமல் உள்ளது! தமிழுக்கும் கோயிலுக்கும் தொடர்பிருந்தால் உன்னிலை இப்படி ஆகியிருக்குமா?

★ ★ ★

- தமிழா,

அரசு அங்காடிகளைப்பார்! தனியார் அங்காடிகளைப்பார்! அங்கே கூட்டம் இடமில்லாமல் குவிய, இங்கே ஈயோட்டிக் கிடப்பானேன்? அந்த அக்கறை! அந்த ஆர்வ வரவேற்பு! கூவிக் கூவி அழைப்பு! வகை வகைப் பொருள்கள்! இங்கே இல்லாமை தானே!

★ ★ ★

◆ தமிழா,

அரசு அஞ்சல் துறைக்கு மயக்க ஊசி போடப்பட்டதா? தனியார் அஞ்சல் துறைக்கு இந்த வளர்ச்சி ஏன்? கட்டணம் குறைவா? கட்டணம் பன்மடங்கு? ஆனாலும் அவர்கள் அள்ளிக் கொட்டல் ஏன்? நம்பகத் தன்மை! வரவில்லை என்றால், உடனே நடவடிக்கை! மறுநாளே உரியவரிடம் சேர்ந்து விடும் என்றும் உறுதிப்பாடு! தொகை கூடுதல் அவர்களை முடக்கவில்லை! தொகை குறைவு முடங்கிக் கிடக்கிறது என்றால் ஏன்? சிந்திக்க வேண்டும் அல்லவா!

★ ★ ★

◆ தமிழா,

அரசுப் பேருந்துகளில் தானே கட்டணம் குறைவாக இருக்க வேண்டும்; வாய்ப்புகளும் நன்றாக இருக்க வேண்டும். ஆனால் நிலைமை என்ன? தனியார் பேருந்துக் கட்டணம் உருவா 20 என்றால், அரசுப்பேருந்துக் கட்டணம் உருவா 30; வாய்ப்புகளைப்பார், ஓட்டை, உடைசல், ஒழுகல்! பெயர் மட்டும் விரைவு, மிக விரைவு, குளுமை, சொகுசு, புறவழி, இடைநிறுத்தம் இல்லாதது! தனியார் வண்டியில் நான்கு பங்குக் கூட்டம் – அரசு வண்டியில் 10 பேர் 20 பேர்! நான்காவது நிற்கும் தனியார் வண்டி நிரம்பி வழிய, முதலில் நிற்கும் அரசு வண்டியில் ஆள் ஏறாமை ஏன்? கட்டணம் மிகுதி; வசதிக்குறைவு; நேரமும் பிந்தல் இவைதானே காரணம்!

★ ★ ★

◆ தமிழா,

ஏதோ சாக்குப் போக்கு வேலை! வேலை செய்யாமலும் கூலி! எடுத்தது போகக் கொடுத்தது வரவு: உழையாமல் காசு வந்தால் உழைப்புத் தொழில் ஒழியுமா? ஒழியாதா? உழவன் அப்படி சம்பளம் கொடுக்க முடியுமா? உழவன் உழைப்பில் அப்படி வேலை செய்தால் உருப்படுமா? இலவய வேலைக் கூலி கிடைக்க, உழைப்புக் கூலிக்கு எவர் வருவார்?

★ ★ ★

◆ தமிழா,

நாடு நாடாக வேலைக்கு அலைகிறான் தமிழன்! சாலை வேலைக்கும் உணவக விடுதி வேலைக்கும் இந்திக்காரன், வட எல்லையில்

வாழ்வான் தான் இங்கு வேண்டுமா? இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்பது பொய்யாக வில்லையா? ஆங்கிலம் படித்தால் உலகமெல்லாம் வேலை என்பது பொய்யாக வில்லையா? உருசியத்திலும் நார்வேயிலும் அம்மொழியைக் கற்றுக் கொண்டு தானே வேலை செய்கின்றனர். இங்கே அம்மொழிகளைக் கற்றா அங்கே வேலைக்குச் சென்றனர்?

★ ★ ★

- தமிழா,

சப்பானியப் பொறிஞன் தமிழகம் வருகிறானே! மொழி பெயர்ப்பாளிகளோடு வருகிறானே! மொழிச்சிக்கல் அவனுக்கு இல்லையே! இங்கிருந்து அங்கே வேலைக்குப் போகின்றவனுக்கும் சிக்கல் இல்லையே! உன்னைக் கொத்தடிமையாய்க் கொண்டு ஆட்சி செய்யும் நடுவண் அரசில் உன் மொழிக்கு ஒத்த உரிமை உண்டா? இந்திக்காரனுக்கு மட்டும் இந்தியா பட்டாப் போட்டுத் தரப்பட்டு விட்டதா? எந்த நாட்டில் மொழி உரிமை இல்லையோ அந்த நாட்டில் வாழ்வது அடிமை வாழ்வே தான்!

★ ★ ★

- தமிழா,

நாட்டு விடுதலைக்கு முன்னது மொழி விடுதலை. அதனைப் பெற நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவர் எண்ணவில்லை! மாநில மொழிகள் அனைத்தும் மைய மொழியாக வேண்டும் என்று குரலெழுப்பவில்லை! பாவாணர் எழுதினார்! மாநிலப் பிரிவின் போதே செய்தாக வேண்டும் என்றார்! அரசு– முடியரசு கூடச் சான்றோர் சொல்லை மதித்து நடந்தது! குடியரசு ஆன பின்னரோ சான்றோர் உரையைக் கேட்கும் அரசாக எதுவும் வரவில்லை! ஏய்ப்பரும் மேய்ப்பரும் ஆகியவர்க்குச் சால்பாவது? சான்றோர் உரையாவது ஏறுமா?

★ ★ ★

- தமிழா,

பூச்சால் நடைபெறாது! புனைந்து பாடுதலால் வராது!

**போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்**

**தேரோட்டம் இல்லை தெளி**

என்னும் மாணிக்கவுரை என்றும் மாணிக்க உரையே! தாய்மொழிக்கு எல்லா வழிகளும் முதன்மை தராத நாடு தாய் நாடு ஆகுமா? தாய் பெற்ற பிள்ளை ஆளும் நாடாகுமா? தாய்மொழி வாழப் போராடாத நாடு தாய் நாடு என ஆகுமா? ஆக்கத் தந்நலச் சூழ்ச்சியர் விடுவரா?

★ ★ ★

- தமிழா,

ஒன்றிய நாடுகள் உலகில் இலவா? அவரவர் மொழியுரிமை காத்துப் போதமை பேணும் நாடு இல்லையா? உலக ஒன்றியம் என்பது இல்லையா? மலையகம்-சிங்கையில் உள்ள மொழியொன்றியம் இந்தியம் கொள்ளாதது ஏன்? உனக்கு ஆக்கமாம் அரசா இந்திய அரசு? அழிவாம் அரசு? உணர்ந்தால் இந்தியக் கொத்தடிமையை ஒழிக்காமல் கிடப்பாகக் கிடப்பாயா? ஏக இந்தியம் என்ன வாய்வருமா?

★ ★ ★

- தமிழா,

ஒரு சீக்கியன், ஒரு வங்காளத்தான்! ஒரு கேரளத்தான் உலகில் துடித்தால் இந்தியத் துடிப்பாக மாறுகிறதே! ஒரு தமிழன் உலகில் துடித்தால் துடிக்கச் செய்வானுக்குத் துணைபோகிறானே திராவிடன், இந்தியன், சீக்கியன் – வங்கத்தான் என எல்லாம்?

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என வாழ்ந்ததால் கெட்டாய்!

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா!"** என்பதை எப்பொழுது உணர்ந்து ஒன்றுபட்டு நிற்கப் போகிறாய்?

★ ★ ★

- தமிழா,

இவற்றைக் குறுகிய நோக்கு என்பவன், தமிழப் பிறவி அல்லன்! தமிழனாய்ப் பிறந்தாலும் தமிழ்ப் பிறவி அல்லன்! அவன் அறிவிலியாக – சிந்தனை அற்ற பிறவியாக – இருக்க வேண்டும்! அல்லது, உட்பகைப் பிறவியாய் – தமிழினத்தை ஒழிக்கப் பிறந்த பிறவியாக இருக்க வேண்டும்!

★ ★ ★

- தமிழா,

அயற் பிறவியான் இதனைக் குறுகிய நோக்கு என்றால், அவன் அறிவறிந்த சூழ்ச்சி வல்லானாய், விரிவு காட்டி வீழ்த்துவானாய்,

என்றும் எதிலும் தமிழன் முன்னேறவே கூடாது என்னும் கயமையே உருவான பிறவியாய் இருக்க வேண்டும்!

★ ★ ★

- தமிழா,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என வாழ்தல் சரியே. ஆனால் அடுத்த அடி,

**"தீதும் நன்றும் நன்றும் பிறர் தர வாரா"** என்பதைக் கைக் கொண்டால் அன்றி உனக்கு உய்வு உண்டா?

★ ★ ★

- தமிழா,

உன் குடியைக் கெடுப்பவை, "குடி குடியைக் கெடுக்கும்! வீட்டையும் கெடுக்கும்! நாட்டையும் கெடுக்கும்" என எழுதிப் போட்டு அரசே நடத்தும் மதுக்கடைகள் தாமே! அதன் வருவாயில் அள்ளியது போக இலவயம் எனக் கொடுப்பது, கொடுப்பதா கெடுப்பதா? குடி கெட்டது! சிந்தனை அற்றது! உழைப்பை ஒழித்தது! இவற்றை என்று சிந்திப்பாய்?

★ ★ ★

- தமிழா,

தொலைக்காட்சி உலகக் குப்பைகளை உன் வீட்டுள் கொட்டல் உணரமாட்டாயா? உழைப்பையும் உன் பண்பாட்டையும் கெடுப்பதை உணர மாட்டாயா? தொலைக்காட்சி தொல்லைக்காட்சி யாக்கத் தானே இலவயம்.

★ ★ ★

- தமிழா,

கல்வியை இலவயமாகத் தா. மருத்துவம் இலவயமாகத் தா, தகுதிக்குத் தக்க வேலை கொடு. வேறு எந்த இலவயமும் தந்து பிச்சைக் கார நாடு ஆக்காதே என்னும் முடிவை என்று எடுப்பாய்? அன்றே உன்னை – உன் வாழ்வை – உயரத்தில் உயரமாக எடுப்பாய்!

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

★ ★ ★



தமிழா,

பூச்சால் நடைபெறாது! புனைந்து பாடுதலால் வராது!

**போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்**
**தேரோட்டம் இல்லை தெளி**

என்னும் மாணிக்கவுரை என்றும் மாணிக்க உரையே! தாய்மொழிக்கு எல்லா வழிகளும் முதன்மை தராத நாடு தாய் நாடு ஆகுமா? தாய் பெற்ற பிள்ளை ஆளும் நாடாகுமா? தாய்மொழி வாழப் போராடாத நாடு தாய் நாடு என ஆகுமா? ஆக்கத் தந்நலச் சூழ்ச்சியர் விடுவரா?

★ ★ ★

தமிழா,

ஒரு சீக்கியன், ஒரு வங்காளத்தான்! ஒரு கேரளத்தான் உலகில் துடித்தால் இந்தியத் துடிப்பாக மாறுகிறதே! ஒரு தமிழன் உலகில் துடித்தால் துடிக்கச் செய்வானுக்குத் துணைபோகிறானே திராவிடன், இந்தியன், சீக்கியன் - வங்கத்தான் என எல்லாம்?

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என வாழ்ந்ததால் கெட்டாய்!

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா!"** என்பதை எப்பொழுது உணர்ந்து ஒன்றுபட்டு நிற்கப் போகிறாய்?